## ஒன்ராரியோவின் பாலகர் பேச்சு மற்றும் மொழி திட்டம

ஒன்ராரியோவின் பாலகர் பேச்சு மற்றும் மொழி திட்டமானது குழந்தைகள் பிறந்ததில் இருந்து பாலகர்களாகி பாட சாலைக்குச்செல்லத்துவங்கும் வரை அவர்களுக்கான சேவைகளை வழங்குகிறது. மாகாணம் முழுவதும் பல்வேறு சமூகத்தினரிடையே பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினருக்கு இயன்றவரையில் அவர்களது வீட்டுக்கு அருகாமையிலேயே மதிப்பீடு மற்றும் பல வகையான சிகிச்சை சேவைகள் வழங்கப்படுகின்றன.

உங்கள் பிள்ளையின் பேச்சு மற்றும் மொழி வளர்ச்சி குறித்த கவலைகள் ஏதும் இருந்தால் ஒன்ராரியோவின் பாலகர் பேச்சு மற்றும் மொழி திட்டத்திலிருந்து நீங்கள் உதவி பெறலாம். இந்த திட்ட அலுவலர்களால் உங்கள் பிள்ளையின் தகவல் தொடர்பு திறமைகளின் வளர்ச்சிக்கு நீங்கள் எவ்வாறு உதவ முடியும் என்பதற்கும் மற்றும் மகன் அல்லது மகளுக்கு ஆரோக்கியமாக வளர்வதற்கு ஏற்ற சிறப்பான வாய்ப்பினை தருவதற்கும் சொல்லித்தர இயலும்.

ஒன்ராரியோ பாலகர் பேச்சு மற்றும் மொழி திட்டமானது உங்களுக்கு இலவசமாக இந்த சேவைகளை தருகிறது மற்றும் இதைப்பெறுவதற்கு வைத்தியரின் அறிமுக குறிப்பு தேவையில்லை.

உதவி பெறுவதற்கு மிகவும் ஆரம்பம் அல்லது முன்னதாக என்பதெல்லாம் இல்லை.

மேலதிக தகவல்களுக்கு உங்கள் பகுதியில் உள்ள பாலகர் பேச்சு மற்றும் மொழி திட்டத்தை தொடர்பு கொள்ளவும், அல்லது கீழே தரப்பட்டுள்ள ஒன்ராரியோ அரசின் INFOline எண்ணை அழைக்கவும்.

**மேலதிக விவரங்களுக்கு, தொடர்பு கொள்க:**


ஒன்ராரியோ அரசு<br>
INFOline: இலவசம் 1-866-821-7770<br>
TTY 1-800-387-5559<br>
www.children.gov.on.ca



Your baby's speech and language skills from birth to 30 months<br>
Catalogue 7710-3136714 Tamil June/07 ©Queen's Printer for Ontario






# உங்கள் பிள்ளையின் பேச்சு மற்றும் மொழி திறமைகள் பிறந்ததிலிருந்து 30 மாதங்கள் வரை

Ontario


பாலகர் பேச்சு மற்றும் மொழி திட்டம்
(PRESCHOOL SPEECH AND LANGUAGE PROGRAM)


குழந்தைகள் பிறந்ததில் இருந்தே, தகவல் தொடர்பு கொள்ளத்துவங்கி விடுகின்றனர். அவர்களது வாழ்க்கையின் மிக ஆரம்ப கட்டத்திலேயே, நீங்கள் சொல்வதை புரிந்து கொள்வதற்கும் மற்றும் அவர்களாகவே ஒலிகளை எழுப்புவதற்கும் கற்றுக்கொண்டுவிடுகின்றனர். அவர்கள் நண்பர்களைப்பெறுவதற்கும் மற்றும் வாசிக்க கற்றுக்கொள்வதற்கும், மற்றும் பின்னாளில் பாடசாலையில் வெற்றி பெறவும் மற்றும் வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கும் தங்களது பேச்சு மற்றும் மொழித்திறமைகளை வளர்த்துக்கொள்ள ஆரம்பிக்கின்றனர். உங்கள் பிள்ளையின் வருங்கால வெற்றிக்கு இந்த தகவல் தொடர்பு திறமைகள் மிகவும் முக்கியமானதாகும்.

தோராயமாக 10 பிள்ளைகளில் ஒரு பிள்ளைக்கு என்ற கணக்கில் வழக்கமான பேச்சு மற்றும் மொழி திறமைகளை வளர்த்துக்கொள்வதற்கு உதவி தேவைப்படுகிறது. இந்த உதவி இல்லாவிட்டால் கவனமாக கேட்பதற்கும் மற்றும் பேசுவதற்கும் போராட்டமாக இருக்கும், வாசிக்க கற்றுக்கொள்வதும் கடினம்தான், மற்றும் மற்ற பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடுவதும் கடினம்.



## வளர்ச்சிக்கான மைல்கற்கள்

இந்த வளர்ச்சிக்கான மைல்கற்கள் இளம் பிள்ளைகள் பேச கற்றுக்கொள்ளும்போது ஏற்படும் மொழித்திறன் வளர்ச்சி குறித்த சில திறமைகளை காட்டுகிறது. உங்கள் பிள்ளை சிறப்பான பேச்சு மற்றும் மொழி திறமைகளை வளர்த்துக்கொள்ள நீங்கள் எவ்வாறு உதவ இயலும் என்பதற்கான சில யோசனைகளும் தரப்பட்டுள்ளன.





### 6 மாதங்களில்

- ஒலி வரும் திசை நோக்கி தலையை திருப்புதல்
- திடீர் என, பெரிய ஒலிகள் கேட்டால் திடுக்கிடுவது
- வித்தியாசமான தேவைகளுக்கு வித்யாசமான விதங்களில் அழுகை - எனக்கு பசிக்கிறது, எனக்கு களைப்பாக இருக்கிறது
- நீங்கள் பேசும்போது உங்கள் முகத்தை கூர்ந்து கவனிப்பது
- உங்களது புன்னகைகள் மற்றும் சிரிப்புகளுக்கு பதிலாக புன்னகை செய்வது மற்றும் சிரிப்பது
- இருமல் மற்றும் வேறு பல ஓசைகளைப்போல அதே மாதிரி குரல் கொடுப்பது - *அஹ், எக், ப்பூ*

### 9 மாதங்களில்

- அவன்/அவளது பெயர் அழைத்தால் அதற்கு தக்கவாறு இயங்குதல்
- தொலைபேசி மணி அடித்தால் மற்றும் கதவு தட்டும் ஓசை ஆகியவற்றுக்கு தகுந்த இயக்கம் காட்டுதல்
- “நோ” எனக்கூறினால் அதன் பொருளை உணர்ந்துகொள்வது
- சைகைகள் மூலமாக அவன்/அவள் தேவையானவற்றை கேட்டுப்பெறுதல் உதாரணமாக தூக்கவேண்டும் என்றால் கைகளை நீட்டுதல்
- உங்களுடன் சேர்ந்து விளையாடுதல் உதாரணமாக, கண்ணாமூச்சி
- மனிதர்களுடன் இருப்பதை விரும்புதல்
- மழலை மொழியில் திரும்பத் திரும்ப பிதற்றுதல் - *பாபாபாபா, த்தத்தத்தத்த*

### 12 மாதங்களில்

- எளிமையான ஒற்றைச்சொல் குறிப்பை பின்பற்றுதல் - “சிட் டவுன்”
- நீங்கள் சுட்டிக்காட்டுவதை காண்பதற்கு அறையின் குறுக்காக பார்வையை செலுத்துதல்
- தொடர்ந்து மூன்று முதல் ஐந்து சொற்களை பாவித்தல்
- தகவல் தொடர்பிற்கு சைகையை பாவித்தல் - “பை பை” என கை அசைத்தல், “நோ” என்பதற்கு தலையை மறுப்பாக அசைப்பது
- ஓசைகள் மூலம், சைகையாலும் மற்றும் சுட்டிக்காட்டும் போதும் உங்கள் கண்களை கூர்ந்து பார்த்து உங்கள் கவனத்தை ஈர்ப்பது
- உங்களிடம் காட்டுவதற்காக விளையாட்டு பொருட்களை உங்களிடம் கொண்டுவருவது
- கவனத்தை கவரவும் மற்றும் புகழ்ச்சியை பெறவும் “நடித்துக்காட்டுதல்”
- பேசுவதுபோல நிறைய ஓசைகளை இணைத்தல் - *அபாபாபா ப்புபூபூ அபீபீபீ*
- படங்களுடன் கூடிய எளிமையான புத்தகங்களில் ஆர்வம் காட்டுதல்

### நீங்கள் பின்வருவனவற்றை செய்யும்போது குழந்தைகளுக்கு மிகவும் பிடிக்கும்:

- உங்கள் முகத்தை அவர்கள் நன்கு பார்க்கக்கூடிய அளவில் வைத்து அவர்களுக்கு நிகராக சமமான அளவில் இறங்கிச்செல்லவேண்டும். அவர்கள் செய்வது மற்றும் சொல்வதில் நீங்கள் ஆர்வம் காட்டுகிறீர்கள் என்று இதன் மூலம் அவர்களுக்கு தெரிவிக்கப்படும். உங்களுடன் தொடர்பு கொள்வதற்கு இது மிகவும் எளிதாக இருக்கும்.
- அவர்கள் உருவாக்கும் ஒலிகளை மறுபடி திருப்பிச்சொல்லவும். குழந்தைகள் ஒலிகளை எழுப்புவதில் மிகுந்த மகிழ்ச்சியடைவார்கள், மேலும் நீங்கள் அந்த ஒலிகளைப்போலவே திரும்ப திரும்ப சொல்வதை மிகவும் விரும்புவார்கள்.
- குறிப்பாக உணவு ஊட்டும்போது, குளித்துவிடும்போது, உடை மாற்றும்போது போன்ற நேரங்களின்போது பாட்டு பாடி நன்கு சிரிக்கவும். நினைவில் கொள்க நாள் முழுவதும் நீங்கள் செய்யும் செயல்கள் குறித்தும் மற்றும் பார்ப்பவை குறித்தும் உங்கள் குழந்தையிடம் சொல்லவும் - “அம்மா கோட் போடுகிறாள்”, “அது பெரிய ரக்”
- அவர்கள் பார்க்கும் மற்றும் விளையாடும் பொருட்களின் பெயரை அவர்களிடம் கூறவும். குழந்தைகள் புதிய பொருட்களை ஆராய்ந்து பார்க்கவும், அவற்றைப்பற்றி தெரிந்துகொள்ளவும் மற்றும் அவற்றின் பெயர் என்ன என்று தெரிந்துகொள்ளவும் மிகவும் ஆர்வம் காட்டுவார்கள்.

### 18 மாதங்களில்

- “உள்ளே மற்றும் வெளியே”, “நிறுத்தம் மற்றும் துவக்கம்” ஆகியவற்றின் கருத்தை புரிந்துகொள்வது
- கேட்கும்போது உடல் உறுப்புக்களை சுட்டிக்காட்டுதல்
- தொடர்ச்சியாக 20 சொற்களையாவது உபயோகித்தல்
- “கரடி பொம்மை எங்கே?”, “அது என்ன?” போன்ற எளிமையான கேள்விகளுக்கு சொற்களாலோ அல்லது சைகைகளுடனோ பதில் சொல்வது
- பொம்மைகள் வைத்து விளையாடும்போது சில செயல்களை நடித்துப்பார்த்து விளையாடுதல் - கரடி பொம்மைக்கு குடிக்க தருவது, வட்டமான பாத்திரத்தை தொப்பிபோல பாவிப்பது
- குறைந்தபட்சமாக நான்கு வித்தியாசமான இசைவு ஒலிகளை எழுப்புதல் - *p, b, m, n, d, g, w, h*
- புத்தகத்தை நீங்கள் வாசித்துக்காட்டுவதையும் மற்றும் உங்களுடன் சேர்ந்து எளிமையான புத்தகங்களை பார்க்கவும் விரும்புதல்
- ஒற்றை விரலை பாவித்து படங்களை சுட்டிக்காட்டுதல்

### 24 மாதங்களில்

- இரண்டுபடிகள் கொண்ட குறிப்புகளை பின்பற்றுதல் - “உனது கரடிபொம்மையை கண்டுபிடித்து பாட்டியிடம் காட்டு”
- 100 முதல் 150 சொற்கள் வரை உபயோகித்தல்
- இரண்டு பெயர் சொற்களையாவது உபயோகித்தல் - “நீ”, “நான்”, “எனது”
- சிறு சொற்றொடரில் இரண்டு அல்லது நான்கு சொற்களை, ணைப்பது - “அப்பா தொப்பி”, “ரக் போகுது கீழே”
- மற்ற பிள்ளைகளுடன் சேர்ந்திருப்பதை விரும்புதல்
- சக பிள்ளைகளுக்கு பொம்மைகளை தருவது மற்றும் மற்ற பிள்ளைகளின் செயல்கள் மற்றும் சொற்களை பின்பற்றி அதே போல செய்வது
- அவன்/அவளது சொற்களில் 50 முதல் 60 சதவீதத்தை மக்களால் விளங்கிக்கொள்ள இயலும்
- எளிதாக சொற்களையும் மற்றும் ஒலிகளையும் உருவாக்க இயலும்
- புத்தகத்தை சரியான முறையில் நேராக பிடித்து பக்கங்களை திருப்புதல்
- பஞ்சு அடைத்த விலங்குகள் மற்றும் பொம்மைகளுக்கு “வாசித்தல்”
- கிரேயான்கள் கொண்டு கிறுக்குதல்

### 30 மாதங்களில

- உருவ அளவுகள் பற்றி விளங்கிக்கொள்வது (பெரிய/சிறிய) மற்றும் எவ்வளவு (கொஞ்சம், நிறைய, அதிகம்)
- பெரியவர்கள் பாவிக்கும், லக்கணம் சிலவற்றை பாவித்தல்
- “இரண்டு குக்கிகள்”, “பறவை பறக்கிறது”, “நான் குதித்தேன்”
- 350 சொற்களுக்கும் அதிகமாக உபயோகித்தல்
- செயல்வினை சொற்களை உபயோகித்தல் - ஓடு, சிதறு, விழு
- சொற்கள் மற்றும் விளையாட்டு பொருட்களை உபயோகித்து, மற்ற பிள்ளைகளுடன் சிறிய அளவில் பகிர்ந்துகொள்ள ஆரம்பித்தல்
- மற்ற பிள்ளை அடிபட்டுவிட்டால் அல்லது சோகமாக இருந்தால் கவலையை வெளிப்படுத்துதல்
- விளையாடும்போது பல செயல்களை இணைப்பது - பொம்மைக்கு உணவை ஊட்டி நித்திரையாக்குதல் சிறு பிளாக்குகளை இரயிலில் வைத்து இரயிலை ஓட்டிச்சென்று பிளாக்குகளை கீழே போடுதல்
- பெரும்பாலான சொற்களை ஆரம்பிக்கும்போது ஒலியை அழுத்தமாக உச்சரிப்பது
- இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட ஒலி இசைவுகள் அல்லது பதங்களுடன் சொற்களை உருவாக்குதல் - “ப-னா-னா”, “கம்-ப்யூட்-டர்”, “ஆ-ப்பிள்”
- நன்கு தெரிந்த முத்திரைகள் மற்றும் சின்னங்களை அடையாளம் கண்டு கொள்வது - மெக்டொனால்ட்ஸ் இன் தங்க வளைவுகள், நிறுத்தக்குறி
- நன்கு தெரிந்த கதைகளை நினைவு கொள்வது

### நீங்கள் பின்வருவனவற்றை செய்யும்போது பாலகர்களுக்கு மிகவும் பிடிக்கும்:

- நீங்கள் புத்தகத்தில் படங்களை காட்டி பெயர்களைச்சொல்லும்போது அவர்கள் புத்தகத்தை தொடுவதற்கும் புத்தகத்தை பிடித்துக்கொள்ளவும் அனுமதிக்கவும்.
- மழலைச்சொற்களை உபயோகிப்பதற்கு பதிலாக உண்மையான சொற்களை உபயோகிக்கவும் - *தாதா* என்பதற்கு பதிலாக “எனக்கு தா” *போபோ* என்றெல்லாம் சொல்லாமல் “போத்தல்” என்று கூறவும்.
- அவர்கள் ஏதாவது சொன்னால் நேரம் செலவிட்டு கவனித்து கேட்கவும் - அவர்கள் தங்களது புதிய சொற்களை, ஓசைகளை மற்றும் யோசனைகளை நீங்கள் கேட்டுக்கொள்ளவேண்டும் என்று விரும்புவார்கள்.
- அவர்கள் பின்பற்றக்கூடிய வகையில் எளிமையான குறிப்புகளை தரவும் - “போய் உனது சிவப்பு காலணிகளை பார்”.
- அவர்களிடம் நீங்கள் பேசும்போது நிறைய வித்யாசமான சொற்களை பாவிக்கவும் - மேல்/கீழ், உள்ளே/வெளியே என்பது போன்ற எதிர்மறை சொற்கள், “ஓடுதல்”, “சிதறுதல்” போன்ற செயல் வினைச்சொற்கள் மற்றும் “சந்தோசம்”, “பெரியது”, “சிறியது”, “சுத்தம்”, “அழுக்கு” போன்ற விளக்கச்சொற்கள்.
- மற்ற பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடும்படி ஊக்கப்படுத்தவும் - வாசகசாலையில், விளையாட்டு குழுக்களில், பூங்காவில்.